நிலைகுலையாத நெஞ்சுரம் – எதனையும் எதிர்கொள்ளும் போர்க்குணம் – வேதனைகளையும் சாதனைகளாக்கும் வித்தகம் – இத்தகு

# அளப்பரிய ஆற்றல் பெற்ற அதிசயத் தலைவர், நமது முதல்வர்!

## சட்டப்பேரவையில் – பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கையில் – அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பதிலுரை!

**சென்னை, மே 3-**

**சட்டப்பேரவையில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், "நிலைகுலையாத நெஞ்சுரம் - எதனையும் எதிர்கொள்ளும் போர்க்குணம்- வேதனைகளையும் சாதனைகளாக்கும் வித்தகம் - இத்தகு அளப்பரிய ஆற்றல் பெற்ற அதிசயத் தலைவர் நமது முதல்வர் அவர்கள்!" என்று புகழாரம் சூட்டினார்.**

சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:

சுயமரியாதையும், தன்மானமும் உயிரைவிட மேலானது என முழக்கமிட்ட தந்தை பெரியார், அறிவாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் ஏதுமில்லை என்றுரைத்த பேரறிஞர் அண்ணா, ஆதிக்க மொழித் திணிப்பைத் தடுத்தவர், அன்னைத் தமிழைச் செம்மொழியாக்கியவர், நவீன தமிழ்நாட்டின் சிற்பி என போற்றப்பட்ட ஐயா முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வள்ளுவன் குறளென வழிவழி நிலையும், இளங்கோ சிலம்பென ஒலிக்கும் நிலையும், ஔவையின் அறிவென ஒளிரும் நிலையும், அதியமான் அருங்கனி அருந்திய நிலையும் ஒருங்கே வாய்ந்த ஒருபெருந் தமிழனாய் இங்கே அமர்ந்திருக்கிறார் என்பதா! (மேசையைத் தட்டும் ஒலி) இல்லை வால்டேர் செய்த வார்த்தைப் புரட்சிகள்; டார்வின் வீசிய தத்துவ வெடிகள்; காரல் மார்க்சின் கனத்த கருத்துகள்; நெல்சன் மண்டேலாவின் உறுதி கொண்ட மொத்த உருவம் என்று சொல்வதா! இல்லை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் மூவரின் மொத்த உருவம் என்பதா! இத்தனையும் ஒருங்கிணைந்ததால், உங்களுக்கு நிலைகுலையாத நெஞ்சுரம்; எதனையும் எதிர்கொள்ளும் போர்க்குணம்; வேதனைகளையும் சாதனைகளாக்கும் வித்தகம்; இத்தகு அளப்பரிய ஆற்றல்பெற்ற அதிசயத் தலைவர் தாங்கள்.

முதலமைச்சர் அவர்களே, உங்கள் மீது அடித்த புயல் திசைமாறி அடித்திருந்தால் இமயமலை கொஞ்சம் இடம் மாறிப் போயிருக்கும்; உங்கள் மீது அடித்த வெய்யில் கடல்மீது அடித்திருந்தால் பாதி சமுத்திரம் பாலைவனமாய் போயிருக்கும்; நீங்கள் புயலில் சுவாசி செய்தீர்; வெயிலில் தேராக உலா வந்தீர்; தன்மானம் ஒன்றே உங்கள் தனிக் கவசம்.

## வன்னியர்குல சத்திரியர் பொது அறநிலையப் பொறுப்பாட்சி மற்றும் நிலக்கொடைகள் வாரியத்திற்கென்று தனியாக புதுக் கட்டடம் இந்த ஆண்டே கட்டப்படும்!

எல்லா மாநிலங்களையும் ஒன்றியம் அசைத்து பார்க்கிறது; முதல்வரே! நீங்கள் ஒன்றியத்தையே உங்கள் கொள்கையால் அசைத்துப் பார்க்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வாய்ப்பை எனக்கு நல்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்காலத்தில் சமூகநீதி காப்பாற்றப்பட, எத்தனை எத்தனை எதிரிகள் முளைத்தாலும், எத்தனை எத்தனை இன்னல்கள் விளைந்தாலும், அத்தனை எதிர்ப்புகளையும் தூள் தூளாக்கி, அடுத்தடுத்த தலைமுறைகளும் அதிகாரத்தை நோக்கி வருவதற்கும், நீதிக் கட்சியின் நீட்சியாக மீதிப் பணியை தொடர்வதற்கும், எப்போதும் சிப்பாயாக களத்தில் நின்று எதிர்காலத்தை வழிநடத்த இருக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவை முன்னவர் அவர்களுக்கும், பேரவைத் தலைவராகிய தங்களுக்கும், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தங்கள் குடும்பத்தில் ஒருவனாக என்னை ஆதரித்து, அதிகமான வாக்குகளை எனக்களித்து, இரண்டாவது முறையாக ஆலங்குடி தொகுதியில் வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

### பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையை உருவாக்கியவர் கலைஞர்!

இட ஒதுக்கீடு என்பது ஒரு நீண்ட நெடிய வரலாற்றுக்குச் சொந்தமானது. இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை மாகாணத்தில்தான் நீதிக் கட்சி ஆட்சிக் காலத்தில், 1921 ஆம் ஆண்டு வகுப்புவாரி இட ஒதுக்கீடு ஆணை communal G.O பிறப்பிக்க ப்பட்டது. ஆனால், அப்போதிருந்த ஆதிக்க சக்தியினர் அதை வரவிடாமல் தடுத்து விட்டார்கள். 1926ல் பனகல் அரசர் ஆட்சிக் காலத்தில், முத்தையா முதலியார் அவர்களின் முனைப்பான நடவடிக்கைகளால் 1929 ஆம் ஆண்டில்தான் தடைகளைத் தாண்டி, இந்த வகுப்புவாரி ஆணை நடைமுறைக்கு வந்தது. அந்த அடிப்படையில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், 881969 அன்று பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையை உருவாக்கியவர் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தலைமைச் செயலகத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் செயலகம் என அனைத்தையும் உருவாக்கியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, இன்றைக்கு விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற சுமார் 78,716 கல்லூரி, பள்ளி மாணவச் செல்வங்களின் நலனைக் கருத்திற்கொண்டு, பள்ளி விடுதி மாணாக்கர்களுக்கு அரசு வழங்கும் உணவுச் செலவினம் மாதம் ரூபாய் 1,000 என்பதை, ரூபாய் 1,400 ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கர்களுக்கான உணவுச் செலவினம் ரூபாய் 1,100 என்பதை ரூபாய் 1,500 ஆகவும் உயர்த்தித் தந்த தாயுள்ளம் கொண்டவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த 4 ஆண்டுக் காலத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் 12 விடுதிகளுக்கு 52 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய கட்டடங்கள், 645 பழுதடைந்த கட்டடங்களை மராமத்து செய்வதற்காக கிட்டத்தட்ட 63 கோடி ரூபாய், 36 பள்ளி விடுதிகளைக் கல்லூரி விடுதிகளாகத் தரம் உயர்த்தித் தந்து மேலும் இந்த ஆண்டு 10 விடுதிகளை தரமுயர்த்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அந்தக் கல்லூரியில் படிக்கின்ற மாணவச் செல்வங்கள் அந்த விடுதிக்குள் வருகின்றபோது வீட்டில் இருப்பதைப்போன்று அனைத்து விடுதிகளும் பராமரிக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும், அவர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டுக்கருவிகள், உடற்பயிற்சிக் கருவிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அங்கே வழங்கப்படுகிறது.

அதோடுமட்டுமல்ல, இந்த 275 கல்லூரி விடுதிகளில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செம்மொழி நூலகத்தை உருவாக்கித் தந்திருக்கிறார் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த ஆண்டு 10 கோடியே 60 இலட்சம் ரூபாயில் தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து விடுதிகளையும் கண்காணிக்கின்ற வகையில் CCTV கேமராக்கள் அமைக்கின்ற பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

> **"இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்களில் தமிழ்நாட்டில்தான் பெண் I.A.S. அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம் தமிழ்நாட்டினுடைய மொத்த I.A.S. அதிகாரிகளுடைய பதவிகளின் எண்ணிக்கை 341 ஆகும். இதிலே, பெண் I.A.S. அதிகாரிகளுடைய எண்ணிக்கை 110 உள்ளனர், ஆண் I.A.S. அதிகாரிகளின் எண்ணிக்கை 231 ஆகும். ஆக, இந்த எண்ணிக்கை அதிகரித்திருப்பதற்கு, இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது. இதற்குக் காரணம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 1989ல் பெண்களுக்கு 30 சதவிகித இட ஒதுக்கீட்டை, வேலைவாய்ப்பிலே உருவாக்கித் தந்ததனால் கிடைத்த வெற்றி என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்."**



கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள். முதலமைச்சர் அவர்கள் 'உறங்காப்புலி'

> **"தமிழ்நாட்டில் தான் பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகம்! முத்தமிழறிஞர் கலைஞர் 1989–ல் பெண்களுக்குக் கொண்டு வந்த 30 சதவிகித இட ஒதுக்கீடே இதற்குக் காரணம்!"**

என்று போற்றப்பட்ட ஐயா பி.கே. மூக்கையா தேவர் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவிப்பு தந்தவுடன் தென்மாவட்ட மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட 299 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 91 பள்ளிகளுக்கு, 47 கோடி ரூபாய் செலவில், கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

### மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்தியிருக்கிறார்!

இந்த 299 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளிலும்கழிப்பறைகளிலும் பல்வேறு பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொண்டு, இன்றைக்கு மதுரை மற்றும் திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தந்திருக்கிறார்.

அதேபோன்று, கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 100 சதவிகிதம் தேர்ச்சி தந்திருக்கின்ற 60 கள்ளர் உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் 100 சதவிகிதம் தேர்ச்சி தந்த 34 பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும், அதேபோன்று ஒவ்வொரு பாடப் பிரிவிலும் மாணவ, மாணவியர்களை 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்த 567 பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு, பாராட்டு விழா தேனி மாவட்டத்தில் நடத்தப்பட்டது. ரூபாய் 10,000 மற்றும் 5000 வீதம் பரிசுத்தொகையுடன் கேடயமும் வழங்கப்பட்டது. 22.1.2022 அன்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்கள் அந்த விழாவில் கலந்துகொண்டு ஆசிரியப் பெருமக்களை வாழ்த்தியது தென் மாவட்ட மக்களிடையே மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் 4 உண்டு உறைவிடப் பள்ளிகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறார். செக்காணூரணி, வெள்ளையம்மாள்புரம், கொண்டமநாயக்கன் பட்டி ஆகிய இடங்களிலும் இந்தப் பள்ளிகளை ஏற்படுத்தித் தந்து அதன்மூலமாக அவர்களுக்குத் தேவையான அனைத்துக் கட்டமைப்புகளையும் உருவாக்கித் தந்திருக்கிறார் .

சீர்மரபினர் நல வாரியம். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 2008 ஆம் ஆண்டில் 68 சமுதாயங்களைச் சார்ந்த விளிம்பு நிலை மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக சீர்மரபினர் நல வாரியத்தை உருவாக்கினார். ஆனால், கடந்த 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் அதைக் கிடப்பில் போட்டார்கள். மீண்டும் நம் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு இதற்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரைத் தலைவராகவும், ராசா அருண்மொழி அவர்களைத் துணைத் தலைவராகவும், 13 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு வாரியத்தை ஏற்படுத்தியதன் அடிப்படையில் இன்றைக்குக் கூடுதலாக இந்த ஓர் ஆண்டுக் காலத்தில் 52,000 புதிய உறுப்பினர்களைச் சேர்த்திருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அந்த அடிப்படையில் 4,750 உறுப்பினர்களுக்கு கிட்டத்தட்ட ரூ.2 கோடியே 15 இலட்சம் செலவில், கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை, மூக்குக் கண்ணாடி உதவித்தொகை மற்றும் முதியோர் உதவித்தொகை போன்ற பல்வேறு திட்டங்கள் அதன் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று சீர்மரபினர் என்று சொல்லக்கூடிய DNC, அவர்களுக்கு கடந்த காலத்தில் DNC என்றும் DNT என்றும் ஒரே ஒருவருக்கு இரண்டு சான்றுகள் வழங்கப்பட்டது. அதனை ஒற்றைச் சான்றாக வழங்க வேண்டும்குறிப்பாக, DNC என்று சொல்லக்கூடிய சீர்மரபின வகுப்பினருக்கு மாநில அரசினுடைய 20 சதவிகித இட ஒதுக்கீடு உட்பட்ட நலத் திட்டங்களைப் பெறுவதற்கும் அதேபோன்று DNT சீர்மரபின பழங்குடியினர் என்று சொல்லக்கூடிய அந்த அடிப்படையில் ஒன்றிய அரசினுடைய நலத் திட்டங்களைப் பெறுகின்ற வகையில் முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒற்றைச் சான்றிதழ் பெற வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் அதனைக் கனிவோடு பரிசீலித்து,

16.3.2024 அன்று DNC/DNT என்ற ஒற்றை சான்றிதழ் வழங்கலாம் என்று ஆணையிட்டார்கள். அந்த ஆணையின்படி இதுவரை 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

### பிரதமருக்கு முதல்வர் கடிதம்!

குறிப்பாக, வன்னியர்களுக்கான 10.5 சதவிகித இடஒதுக்கீடு. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவந்து அளிக்கப்பட்ட அந்த இடஒதுக்கீடு குறித்து உச்ச நீதிமன்றம் என்ன சொல்லியிருக்கிறது என்றால், தற்காலத் தரவுகளின் அடிப்படையில்தான் இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டு அதனை ரத்து செய்தது. அதனை ரத்து செய்தவுடன் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.10.2023 அன்று இந்தியப் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். இந்தியா முழுவதும் சமூக நீதி நிலைநாட்டப்பட வேண்டும், எனவே, ஒன்றிய அரசாங்கம் 2021 ஆம் ஆண்டில் எடுக்க வேண்டிய தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பை இதுவரை எடுக்கவில்லை. அது உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும், தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புடன் சேர்த்து, சாதிவாரி கணக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டுமென்று இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

அதனைத் தொடர்ந்து நமது முதலமைச்சர் அவர்கள், கடந்த 26.6.2024 அன்று இதே சட்டமன்றத்தில், தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்போடு சேர்த்து, சாதிவாரி கணக்கெடுப்பும் எடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானமாகவும் நிறைவேற்றி இந்தியப் பிரதமர் அவர்களுக்கு அதனை அனுப்பி வைத்திருக்கிறார். ஆனால், இன்று வரை ஒன்றிய அரசாங்கம் அதற்குச் செவி சாய்க்கவில்லை. இருந்தாலும், இன்றைக்கும் வன்னிய சமுதாய மக்களுக்கு எது உதவியாக இருக்கிறது என்றால், 1989 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் உருவாக்கித் தந்த, வன்னியர் உள்ளிட்ட 108 சமுதாயங்கள் கொண்ட மிகப் பிற்படுத்தப்பட்டோர் பிரிவின் மூலமாக, அதற்கான இடஒதுக்கீட்டின்மூலமாக இன்றைக்கு வன்னிய சமுதாய மக்கள் சுமார் 15, 16 சதவிகிதம் பயன்பெற்று வருகிறார்கள். இன்றைக்கும் அது நடைமுறையில் உள்ளது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பற்றிச் சொன்னார். புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் அவர்கள்,

"எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லையென்றால்

இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்"

என்று சொன்னார். அந்த அடிப்படையில் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் படிப்புகளுக்கான 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டில், இதுவரை 2,170 மாணவர்கள் மருத்துவப் படிப்பில் சேர்ந்து பயன்பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக சுமார் 178 கோடி ரூபாய் கல்விக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், உயர் படிப்புக்கான அந்த வாய்ப்பினை மருத்துவப் படிப்புகள் அல்லாத பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் ஆகிய துறைகளைச் சார்ந்த உயர் படிப்புகளுக்கும் 7.5 சதவிகித இடஒதுக்கீட்டினை விரிவு படுத்தினார்கள். அந்த அடிப்படையில் இன்றைக்குப் பொறியியல் கல்லூரிகளில், வேளாண்மைக் கல்லூரிகளில், கால்நடைக் கல்லூரிகளில், மீன்வளக் கல்லூரிகளில், சட்டக் கல்லூரிகளில் என்று அனைத்திலும் சேர்ந்து மொத்தம் 40,631 மாணவ மாணவிகள் பயன்பெறுகிறார்கள். அவர்களின் கல்விக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களுக்காகவும் முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட தொகை ரூ.911 கோடி என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் மருத்துவர்களையும், பொறியாளர்களையும், வேளாண் அறிவியல் விஞ்ஞானிகளையும், கால்நடை மருத்துவர்களையும் மட்டும் உருவாக்கவில்லை; அண்மையில் UPSC தேர்வு எழுதிய மாணவர்களில், தமிழ்நாட்டில் நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக சுமார் 50 மாணவர்கள் அதில் தேர்ச்சி பெற்றிருக்கின்றார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நமது துணை முதலமைச்சர் அவர்கள் தந்தார் அல்லவா! இந்த 40,000 மாணவர்களையும் நாம் பிற்காலத்தில் track செய்து பார்த்தால், இவர்களிலும் I.A.S., I.P.S. அதிகாரிகள் உருவாவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வி உதவித்தொகை திட்டம்.

## ரூ.3 கோடியில் 5 புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள்! அனைத்து விடுதிகளிலும் – ரூ.30 கோடியில் சிறப்பு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள்!

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே;**

**சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே;**

**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;**

**நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே,**

**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கி,**

**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"**

என்பது ஒரு புறநானூற்றுப் பாடல். இதன் பொருள் என்னவென்றால், அறிவார்ந்த சமுதாயத்தை, கல்வியில் சிறந்த சமுதாயமாக உருவாக்க வேண்டுமென்று புறநானூற்றுப் பாடல் வரிகள் சொல்கின்றன. அதற்காக நமது முதலமைச்சர் அவர்கள், +1 முதல் Ph.D. வரை படிக்கின்ற மாணவர்களுக்கு உயர் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தைத் தந்திருக்கின்றார்.

அதேபோன்று, 2022-2023 ஆம் ஆண்டில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவிகளுக்கு மட்டும் ஆண்டுக்கு 4,000 ரூபாய் உதவித் தொகை வழங்குகின்ற திட்டம், அதேபோல, I.I.T., I.I.M., N.I.T., Indian Institute of Information Technology மற்றும் மத்தியப் பல்கலைக்கழகங்களில் படிக்கின்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஆண்டுக்கு 2 இலட்சம் ரூபாயை அவர்களுக்கான கல்வி உதவித்தொகையாக வழங்கும் திட்டம் ஆகியவற்றை நமது முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியிருக்கிறார். அதன்மூலமாக, இந்த 4 ஆண்டுகளில் மட்டும் 39,86,622 மாணவச் செல்வங்களுக்கு 1,242 கோடி ரூபாயை கல்வி உதவித்தொகையாக வாரி வழங்கிய வள்ளல்தான் முதலமைச்சர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது, கடந்த 4 ஆண்டுகளாக நமது முதலமைச்சர் அவர்கள் வழங்கியவர்கள், ரூ.1 இலட்சத்தை ரூ.5 இலட்சமாக உயர்த்தித் தந்திருக்கிறார். 1 பவுன் தங்கப் பதக்கத்துடன், நான்கு ஆண்டுகளாக விருதுகள் பெற்றவர்கள். 2021 ஆம் ஆண்டு க. திருநாவுக்கரசு, 2022 ஆம் ஆண்டு, கவிஞர் கலி பூங்குன்றன், 2023 ஆம் ஆண்டு, சுப. வீரபாண்டியன் மற்றும் 2024 ஆம் ஆண்டு விடுதலை இராசேந்திரன் அவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பெற்றிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேமாதிரி, 2009 ஆம் ஆண்டில் வன்னியர்களுக்கான பல்வேறு அறக்கட்டளைச் சொத்துக்களைக் கண்டு கொள்வதற்காக, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், 2009 ஆம் ஆண்டில் வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம் உருவாக்கப்பட்டது. அது இடையிலே பெயர் மாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசால் 'வன்னியர் குல சத்திரியர் பொது அறநிலையப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலக் கொடைகள் சட்டம் - 2018' என்ற புதிய சட்டம் 4.2.2019 அன்று நடைமுறைக்கு வந்தது. அந்த அடிப்படையில், இன்றைக்கு தலைவர் உட்பட 12 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

### மாணவ-மாணவிகளுக்கு மிதிவண்டிகள்!

2024-2025 ஆம் ஆண்டில் 4 வன்னியர் அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டு, இதுவரைக்கும் 126 அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் 90 அறக்கட்டளைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 49 அறக்கட்டளைகளை தமிழ்நாடு அரசில் வெளியிட்டுள்ளோம் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, அந்த மக்கள் காலையிலேகூட விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அ. அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம் அவர்கள் வன்னியர்குல சத்திரியர் பொது அறநிலையப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலக் கொடைகள் வாரியத்திற்கென்று தனியாக சொந்தக் கட்டடம் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே அற்கான புது கட்டடம் கட்டப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். கட்டணமில்லா மிதிவண்டிகள், இன்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் 4 ஆண்டுகளில் 22 இலட்சத்து 10 ஆயிரம் மாணவ, மாணவிகளுக்கு, ரூ.1,082 கோடியில் மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் TABCEDO இதன் மூலமாக பொது நலக் கடன், சுய உதவிக் குழுக்களுக்கான கடன், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கடன் என இந்தத் திட்டத்தின் மூலமாக 4 ஆண்டுகளில் 60,810 பயனாளிகளுக்கு ரூ.422 கோடி கடன் வழங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த ஆண்டு ரூ.120 கோடியாக இலக்கை நிர்ண யித்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

> **"எதிர்காலத்தில் சமூகநீதி காப்பாற்றப்பட, எத்தனை எத்தனை எதிரிகள் முளைத்தாலும், எத்தனை எத்தனை இன்னல்கள் விளைந்தாலும், அத்தனை எதிர்ப்புகளையும் தூள் தூளாக்கி, அடுத்தடுத்த தலைமுறைகளும் அதிகாரத்தை நோக்கி வருவதற்கும், நீதிக் கட்சியின் நீட்சியாக மீதிப் பணியை தொடர்வதற்கும், எப்போதும் சிப்பாயாக களத்தில் நின்று எதிர்காலத்தை வழிநடத்த இருக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)"**

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்